

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு அவர்கள், நேற்று (20.08.2025) அண்ணா நகர் கிழக்கு பிளாக, எச்.1 மூன்றாவது அவென்யூவில், ரூபாய் 62 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் (TNUIFSL) புதிய அலுவலகக் கட்டடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர், ராஜேந்திர ரத்னூ, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர், ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், மரு.ஜி.எஸ்.சமீரன், நகராட்சி நிர்வாக இயக்குநர், பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர், எம்.பிரதீப் குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. ராமலிங்கம், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டத்தில்

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், ஆக.22-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் குடியிருப்பு பணிகளை வருகின்ற நவம்பர் 2025-க்குள் விரைந்து முடித்து பொதுமக்களுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்க உத்தரவு வழங்கி குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டபோது தகவல் தெரிவித்தனர்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் நேற்று (20.08.2025) புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளியின் நிறுவனத்தினையும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பெரியார் நகர், அல்லிக்குட்டை, காந்திநகர், நேரு நகர் ஆகிய பகுதியில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

சேலம் மாவட்டம், கந்தம்பட்டி பகுதியில் புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.19.42 இலட்சம் கடனுதவி பெற்று ஃபிளக்ஸ் பிரிண்டிங் தொழில் செய்து அ.மனோகரன் நிறுவனத்தினை அமைச்சர் பெருமக்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.6.79 இலட்சம் மானியம் தொகை குறித்த காலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும், மாத தவணை தொகையினை உரிய காலத்திற்குள் செலுத்தப்பட்டு வருகிறதா என்பது குறித்தும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் கேட்டறிந்தார்கள்.

பின்னர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் நலனுக்கென செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய திட்டங்கள் அனைத்தும் முறையாக உரிய கலத்தில் பயனாளிகளுக்கு சென்று சேருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் ரூ.2,057.90 கோடி மானியத்துடன் ரூ.5,301.63 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு, 63,014 புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டங்களின் கீழ் ரூ.317.48 கோடி மானியத்துடன் ரூ.587.34 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு, 3,619 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். மேலும், கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் 3,180 கைவினை கலைஞர்களுக்கு ரூ.12.21 கோடி மானியத்துடன் ரூ.58.48 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்கள் மூலம் புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 166 பயனாளிகளுக்கு ரூ.35.40 கோடி மானியத்துடன் ரூ.97.96 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 359 பயனாளிகளுக்கு ரூ.6.69 கோடி மானியத்துடன் ரூ.22.35 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 1,345 பயனாளிகளுக்கு ரூ.59.16 கோடி மானியத்துடன் ரூ.161.01 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 149 பயனாளிகளுக்கு ரூ.13.67 கோடி மானியத்துடன் ரூ.25.38 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், பிரதம மந்திரி மைக்ரோ ஃபுட் பிராசசிங் எண்டர்பிரைசஸ் திட்டத்தின் கீழ் 496 பயனாளிகளுக்கு ரூ.13.34 கோடி மானியத்துடன் ரூ.36.22 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் 675 பயனாளிகளுக்கு ரூ.2.73 கோடி மானியத்துடன் ரூ.16.18 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் என மொத்தம் சேலம் மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் 3,190 பயனாளிகளுக்கு ரூ.131 கோடி மானியத்துடன் ரூ.359.10 கோடி வங்கிக்கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, கடந்த 4 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 10 வகையான மானியத்திட்டத்தின் கீழ் 552 தொழில் முனைவோர்களுக்கு ரூ.27.53 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பெரியார் நகர் பகுதியில் ரூ.27.18 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 280 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும், அல்லிக்குட்டை நகர் பகுதியில் ரூ.49.25 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 504 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும்,

அதேபோன்று சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் காந்தி நகர் பகுதியில் ரூ.27.19 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 280 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும், நேரு நகர் பகுதியில் ரூ.38.06 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 392 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும் அமைச்சர் பெருமக்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இத்திட்டப்பகுதிகளில், ஒவ்வொரு கட்டிட தொகுப்பும் தரைதளம் மற்றும் 6 தளங்களை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகும். ஒவ்வொரு குடியிருப்பும் தலா 400 சதுர அடி பரப்பில் ஒரு வரவேற்பறை, ஒரு படுக்கையறை, ஒரு சமையலறை, ஒரு குளியல் அறை மற்றும் கழிப்பறை கொண்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் மின் வசதி, குடிநீர் குழாய் இணைப்பு வசதி மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்பு வசதி ஆகிய அடிப்படை தேவைகளுடன் இக்குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து திட்டப்பணிகளை விரைவாகவும், தரமாக முடித்து வருகின்ற நவம்பர் 2025-க்குள் பொது மக்களுக்கான வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவர அமைச்சர் பெருமக்களால் தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் எல்.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் செந்தில் குமார், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் பாண்டியன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### எம்.எட். (M.Ed.) மாணாக்கர் சேர்க்கைக்கான

# இணையதள விண்ணப்பப் பதிவு நீட்டிப்பு!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, ஆக.21-

2025-26ஆம் கல்வியாண்டிற்கான அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட் (M.Ed.) மாணாக்கர் சேர்க்கைகான இணையதள விண்ணப்பப் பதிவு 11.08.2025 அன்று முதல் தொடங்கி நேற்றுடன் (20.08.2025) முடிவடைகிறது. இந்த கால அவகாசம் 15.09.2025 வரை நீட்டிக்கப் படுவதாக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாட்டில் எம்.எட். பாடப்பிரிவுகள் கொண்டுள்ள 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 300 இடங்கள் உள்ளன. இவ்விடங்களுக்கு 2025-26ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 11.08.2025 முதல் தொடங்கப்பட்டது. மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணைய தளம் வாயிலாக விண்ணப்பப் பதிவினை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி விண்ணப்பப் பதிவு இன்றுடன் முடிவடைகிறது. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தரவரிசையின் படி 26.08.2025 முதல் கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கை தொடங்கும். இதன் விவரம் SMS மற்றும் e-mail மூலம் மாணாக்கர்களுக்கு அனுப்பப்படும். முதலாம் ஆண்டு வகுப்புகள் 01.09.2025 அன்று முதல் தொடங்கும்.

எம்.எட். சேர்க்கைகான விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க 21.08.2025 முதல் www.tngasa.in என்ற இணைய தளம் வாயிலாக தொடர்ந்து விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் 15.09.2025 வரை மாணாக்கர்கள் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

### விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியத்தில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 21-

செஞ்சி ஒன்றியம் தேவதானம்பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' "திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் தேவதானம் பேட்டை ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், பிரபா சங்கர் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் அன்னமயில் ஜெயராமன் அனைவரை வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமைத் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

# தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் 24.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில்;

**கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., சிறப்புரையாற்றிட;**

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 18.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில், பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நேற்று (20.08.2025) நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார்ஆட்சியர் செல்வி சங்கீதா, உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. சோமசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.



சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (20.08.2025) அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களிடையே வாழ்வியல் திறன்களோடு அவர்களின் பன்முகத்திறன் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு கலைத்திறன்கள் வாயிலாக மாணவர்களின் சிந்தனைகளை செம்மையாகவும், சிறப்பாகவும் வெளிப்படுத்துவதற்காக கலைப்பட்டறை தொடங்கி வைத்து, 80 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி என்.லதா, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி கே.சசிகலா, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் திருமதி சி.அமுதவல்லி, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.